**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 02.07.2026**
**OS. No. 186/2024**
**வழக்கு சாட்சி PW.2–பெருமாள், த/பெ. நாராயணன்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>1, 3 **பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

1) 2ம் வாதி சாமிதுரை எனது தாய்மாமன் என்றால் சரிதான். அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும், தாவா கோவிலுக்கும் சுமார் 3–1/2 கி.மீ தொலைவு இருக்கும். நான் தாவா கோவிலுக்கு வரி செலுத்துவேன், காணியாச்சியாக இல்லை. என் நிரூபண வாக்குமூலத்தில் வரி செலுத்துவதாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் நிரூபண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகளை என் வழக்கறிஞர் படித்து காண்பிக்க நான் தெரிந்து கொண்டேன். என் நிரூபண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. நான் விவசாயம் செய்து வருகிறேன்.

2) நான் ரேஷன் கடையில் அரிசி, பருப்பு ஆகியவற்றை வாங்கி வெளியே விற்கும் தொழிலும் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல, நான் ரேஷன் கடையில் வேலை செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் நான் ரேஷன் கடையில் வேலை பார்ப்பது குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாவா கோவிலுக்கு டொனேஷன் செலுத்தியுள்ளதாக சொல்லியுள்ள நிலையில் டொனேஷனுக்குண்டான ரசீதுகள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் டொனேஷன் கொடுத்துள்ளேன், ஆனால் ரசீதுகள் எதுவும் நான் வாங்கவில்லை. டொனேஷனை நான் 2ம் வாதி சாமிதுரையிடம் தான் கொடுப்பேன்.

3) டொனேஷனை கையாடல் செய்ததாக 2ம் வாதி மீது ஊர் மக்கள் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமாள ன்றால் தெரியாது. தாவா கோவிலுக்கு நான் அவ்வப்போது சென்று வருவேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2

புகைப்படத்திலுள்ள கல்வெட்டு தற்போது தாவா கோவிலில் உள்ளது என்றால் தற்போது உள்ளதா என்று தெரியவில்லை, சுமார் 5 வருடங்களுக்கு முன்பு அவ்வாறு எதுவும் இல்லை. நான் தாவா கோவிலுக்கு சென்று சுமார் 6 மாதங்கள் இருக்கும். அந்த சமயத்தில் பி.வா.சா.ஆ.2 புகைப்படத்திலுள்ள கிரில் கேட்டிற்கு மேல் உள்ள வாசகங்கள் இருந்ததா என்றால் நான் அதை பார்க்கவில்லை.

4) நாகராஜ் என்பவர் தான் தாவாகோவில் அமைந்துள்ள கிராமத்திற்கு ஊர் கவுண்டர் என்றால் சரிதான். ரெட்டியூரில் ரெட்டியார் குடும்பம் சுமார் 10 குடும்பம் தான் உள்ளது. என் நிரூபண வாக்குமூலத்திலும் 10 குடும்பங்கள் தான் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். ரெட்டியூரில் வன்னியர் சமூகத்தை சார்ந்தவர்கள் தான் அதிகமாக உள்ளார்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் அவர்கள் தான் தாவா கோவிலை நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, அனைத்து சமூகத்தினரும் சேர்ந்து தான் நிர்வாகம் செய்து வருகிறார்கள். நிர்வாக உறுப்பினர்கள் யார் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா கோவிலின் திருவிழாக்கள் அனைத்தையும் யார் நடத்தி வருகிறார்கள் என்றால் இரண்டு வருடங்களாக ஊரிலுள்ள இளைஞர்களே நடத்தி வருகிறார்கள், ஊர் கவுண்டரை சேர்த்து கொள்வதில்லை.

5) கடந்த இரண்டு வருடங்களாக நான் தாவா கோவிலுக்கு நான் டொனேஷனோ, வரியோ எதுவும் கொடுப்பதில்லை என்றால் சரிதான். இரண்டு வருட காலமாக கோவிலில் வரவு, செலவு ஆகியவை கோவிலுக்கு வெளியே ஒட்டப்படுகிறது என்றால் நான் இரண்டு வருடங்களாக கோவிலுக்கு செல்லவில்லை. இதற்கு முன்பு நான் கோவிலுக்கு சென்ற சமயங்களில் அவ்வாறு வரவு, செலவு ஒட்டப்பட்டிருந்ததா என்றால் இல்லை. தாவா கோவிலில் வாதிகள் மற்றும் ராஜகோபால் பணத்தை கையாடல் செய்து விட்டார்கள் என்றும், அதனால் தான் ஊர் இளைஞர்களே தாவா கோவிலை பராமரித்து திருவிழாக்கள் நடத்தி வருகிறார்கள் என்றும், அதனால் தான் அவர்கள் வரவு செலவுகளை அனைவரும் அரிய கோவிலுக்கு வெளியே ஒட்டுகிறார்கள் என்றால் சரியல்ல.

6) வாதிகள் இது தொடர்பாக காவல் நிலையத்திலும், வருவாய் துறையினரிடமும் புகார்கள் கொடுத்தார்கள் என்றும், அவர்களுக்கு ஆதரவாக எ வ்வித உத்தரவும் பிறப்பிக்காததால் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தையும் அணுகினார்கள் என்றும், அதுவும் அவர்களுக்கு ஆதரவாக நிறைவுபெறாததால் இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், நானும் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.